கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 05.03.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## சுழற்சாவி தொழிலாளர் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலுள்ள புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறை, புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைச்சகத்தின் நிதியுதவி பெற்று செயல்படும் சாண எரிவாயு மற்றும் பயிற்சி மையத்தின் (BDTC) மூலம் பல்வேறு மாவட்டத்திலிருந்து வருகை புரிந்திருந்தவர்களுக்கு சுழற்சாவி தொழிலாளர் பயிற்சி 05.03.2025 அன்று தொடங்கப்பட்டது. இப்பயிற்சி 05.03.2025 முதல் 19.03.2025 வரை பதினைந்து நாட்களுக்கு நடத்தப்படுகிறது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுமார் இருபது பயனாளர்கள் கலந்துகொண்டனர். முனைவர் ப.சுப்பிரமணியன் வரவேற்புரை அளித்தார். தொடக்கவுரையின்போது, முனைவர் தே.ரமேஷ், பயிற்சியின் முக்கியத்துவத்தையும் புதுப்பிக்கவல்ல ஆற்றல் துறையின் சாண எரிவாயு திட்டம், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு வாய்ப்புகளை உருவாக்க வழிவகுக்குமென கூறினார். நிகழ்வின் நிறைவாக முனைவர் வெ.பழனிசெல்வம் நன்றியுரை ஆற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**